[27th April 1962

SRI M. KALYANASUNDARAM : இப்போது விவசாயக் கல்லூரியை பல்கலைக் கழகமாக ஏற்படுத்தினால் என்னென்ன அனுகூலங்கள் ஏற்படுமென்று அரசாங்கம் எதிர்பார்க்கிறது ?

THE HON. SRI P. KAKKAN : அப்படிச் செய்வதினால் அனுகூலங்கள் இருக்கின்றன. யூனிவர்சிடியாக மாற்றவேண்டுமானால் அதற்கு எவ்வளவு செலவாகும் என்பது பின்னால் தெரியும்.

Cement factory

* 14 Q.—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there was any proposal to establish a cement factory in East Ramanathapuram;

(*b*) if so, when;

(*c*) the total amount to be invested in it; and

(*d*) the number of persons to be employed in it?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) An application has been made to the Government of India for the grant of a licence for the establishment of a cement factory in East Ramanathapuram district, in the private sector.

(*c*) & (*d*) As the industry is proposed to be established in the private sector, it is not possible to disclose further details.

SRI S. MADHAVAN : எந்த இடத்தில் வைக்கப்படும் என்று சொல்ல முடியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இதுகூட இப்போது சொல்ல முடியாது.

SRI M. KALYANASUNDARAM : சிமெண்டு பற்றாக்குறை மிக அதிகமாக இருப்பதன் காரணத்தினால் திருச்சி ஜில்லாவிலும், சேலம் ஜில்லாவிலும் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கும் உத்தேசம் எந்த நிலையில் இருக்கிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : சேலம் ஜில்லாவிலே சங்கரிதுர்க்கிலே ஒரு சிமெண்ட் தொழிற்சாலை ஏற்படுத்த லைசன்ஸ் வழங்கியாகிவிட்டது. கரூர் திண்டுக்கல்லில் ஒரு பெரிய அளவில் சுண்ணாம்புக் கல் கிடைப்பதுபற்றி ஆராய்ச்சி செய்யப்பட்டது. இப்போது கிடைத்த தகவல்படி அங்கு 5 லட்சம் டன் உற்பத்தி செய்யக்கூடிய ஒரு தொழிற்சாலைக்கு சாங்க்ஷன் கொடுக்கப் பட்டது.

SRI T. L. SASIVARNA THEVAR : கிழக்கு ராமநாதபுரத்தில் இருக்கும் தொழிற்சாலையை மண்டபத்திற்கு மாற்றுவதாக பிரஸ்தாபிக்கப்படுகிறது. இது உண்மையா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இந்த இடத்தில் தொழிற்சாலை தனியார் துறையில் வைக்கப்படுவது. எந்த இடத்தில் வைத்தால் லாபகரமாகவும் வெற்றிகரமாகவும் இருக்குமென்று நினைக்கிறார்களோ அந்த இடத்தில் அவர்கள் வைப்பார்கள்.

27th April 1962]

Sri A. P. DHARMALINGAM : திருச்சி மாவட்டத்தில் சிமெண்ட் உற்பத்திக்கு தேவையான அளவு ஜிப்சம் மற்றும் மூலப் பொருள்கள் அதிகமாக கிடைப்பதால் அங்கிருந்து மற்ற மாவட்டங்களுக்கு கொண்டு செல்லப்படுகிறது. ஆகையால் திருச்சி மாவட்டத்தில் கிடைக்கும் ஜிப்சத்தைக் கொண்டு சிமெண்ட் தொழிற்சாலை ஏற்படுத்த அரசாங்கம் முயற்சி எடுக்குமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : சிமண்ட் உற்பத்தி செய்வதற்கு மிகவும் முக்கியமான மூலப்பொருள் சுண்ணும்புக்கல். ஜிப்சம் மிகவும் சொர்ப்பமான அளவில் செலவிடப்படுகிறது. அதனுல் இதைக்கொண்டு சிமெண்ட் தொழிற்சாலை ஏற்படுத்த முடியாது. சுண்ணும்புக்கல்தான் அதிக அளவில் தேவை.

Sri A. ARUMUGAM : வட ஆற்காடு மாவட்டத்திலும் ஒரு சிமெண்ட் தொழிற்சாலை ஏற்படுத்த சர்க்கார் முன்வருமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் அவர்கள் ஒரு சிமெண்ட் தொழிற்சாலை வைப்பதற்கு என்னென்ன மூலப்பொருள்கள் கிடைக்கும், எங்கே கிடைக்கும் என்பதைத் தெரிந்து சொன்னுல் சர்க்கார் அவருக்கு நன்றி செலுத்தும்.

Handloom industry (Financial Corporation)

* 15 *Q.*—Sri V. S. S. MANI : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the State Government has any proposal to form a finance corporation to help the handloom industry?

The Hon. Sri R. VENKATARAMAN : Yes, Sir.

Sri V. S. S. MANI : On 30th September 1961 the Hon. Sri R. Venkataraman inaugurated a meeting to form a Handloom Finance Corporation sponsored by the Director of Handlooms, Madras. Is it a fact that Central Government did not take interest in the matter and had neglected South in this regard?

The Hon. Sri R. VENKATARAMAN : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஹாண்ட்லூம் பைனன்ஸ் கார்பொரேஷன் ஏற்படுத்தவேண்டுமென்று ராஜ்ய சர்க்காருடைய யோசனை. இதில் சற்றேரக்குறைய மொத்தம் 40 லட்சம் ரூபாய் மூலதனம் போட வேண்டும். இதில் சர்க்கார் 10 லட்சம் மூலதனம் போடுகிறுர்கள். மற்றவை இந்தத் தொழிலிலே ஈடுபட்டுள்ளவர்கள் செலுத்த வேண்டும். இந்த பைனன்ஸ் கார்ப்பொரேஷன் ஏற்படுத்துவதற்கான பூர்வாங்க நடவடிக்கை எடுத்தாகிவிட்டது. ஆனுல் இதில் ஒரு புதிய சட்ட பிரச்னை தோன்றியது. இது டிரேடிங் கார்ப்பொரேஷனுக இருக்கவேண்டுமா அல்லது பாங்கிங் கார்பொரேஷனுக இருக்கவேண்டுமா என்பதுதான். இந்த இரண்டு விஷயங்களும் பரிசிலனையில் இருக்கிறது. இதனுல்தான் காலதாமதம் ஏற்படுகிறது.